**செ.வெ. எண்: 495** **நாள்: 23.08.2012**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாட்டில் தற்போது நிலவும் மின்பற்றாக்குறையினை விரைவில் முடிவுக்கு கொண்டு வரும் வகையில், தற்போது நடைபெற்று வரும் புதிய மின் திட்டங்கள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் இன்று (23.8.2012) தலைமைச் செயலகத்தில் விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், தமிழ்நாடு மின்சார வாரியமும், தேசிய அனல் மின் கழகமும் இணைந்து மேற்கொண்டு வரும் 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் திட்டத்தின் மூன்று அலகுகள்; 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல்மின் திட்டம் மற்றும் 600 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல்மின் திட்டத்தின் இரண்டு அலகுகள் ஆகியவற்றில் உள்ள முன்னேற்றம் குறித்தும், தமிழ்நாட்டில் நிலவும் பொதுவான மின் நிலைமை குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இதனையடுத்து, தற்போது வல்லூர், மேட்டூர் மற்றும் வட சென்னை அனல் மின் திட்டப் பணிகளை மேலும் விரைந்து மேற்கொண்டு, விரைவில் மின் உற்பத்தியை தொடங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அதிகாரிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், தமிழ்நாட்டில் தற்போது நிலவும் மின் பற்றாக்குறை விரைவில் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 23.8.2012